[illegible]

Q22:417
N32
149488.

1436 1436

ஓம்

தத்சத்

MADRAS

திருவேங்கட நாதர்

அருளிச்செய்த

# கீதாசாரத்தாலாட்டு

இஃது

ஸ்ரீகோயிலூர்

பொன்னம்பல சுவாமிகள்

முன்னிலையில்

பரிசோதித்த பிரதிக்கிணங்க,

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1932

தாண்டவராயப்பிள்ளைத் தெரு.

Q22:417
N32
149488.

உ

கணபதி துணை

திருவேங்கடநாதர்

அருளிச்செய்த

# கீதாசாரத்தாலாட்டு

இஃது

ஸ்ரீகோயிலூர்

**பொன்னம்பலசுவாமிகள்**

முன்னிலையிற் பரிசோதிக்கப்பட்ட

பிரதிக்கிணங்க

OFFICE OF THE REGISTRAR
1933
MADRAS

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது

1932

இதன் விலை அணா-2.

சென்னை-600 006.
14488

# சிறப்புப்பாயிரம்

ஐவகைப் பொருளுநான்கு கரணமுங்குணங்கண்மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்தபுத்தேள்
கைவள ராழிச்செங்கட்கண்ணனைக் கருத்துள்வைப்பாம்.

மாதையர்கோன் வேத நவில்வாய் வேங்கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள்—கீதைக்
கருத்துயர் தாலாட் டாகக் கட்டுரைத் தான்யாருங்
கருத் துயர்தீர்ந் தெய் தக்கதி.

2492
894'811

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீகிருஷ்ணாயபரப்ரம்மணேநம:

# கீதாசாரத்தாலாட்டு

## நூல்

சீராரும் பரமார்த்த தெரிசனத்தை யருள்செய்யப்
பேராரும் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ. 1

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா
லருச்சுனற்குமெய்ஞ்ஞான மனைத்துமுறைசெய்தவரோ.

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதம்வரு மென்றிரங்கி
யஞ்சினவன்பயந்தீர்த்தே யமர்செய்யச் சொன்னவரோ.

சுற்றமறிற்சோகமெனச் சொல்லினைசற்றறிந்தவன்போற்
கற்றுணர்ந்த பேரதனாற் கலங்கார்கா ணென்றவரோ. 4

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரேனா
மலங்காம னானிருக்கும் வகையுரையு மெனவினவ. 5

நீயுநானும் புவிமே னிருபர்களு மெய்யுணர்வா
லாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமில்லை யென்றவரோ. 6

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லையென்றீ ரிவ்வுலகி
னீங்குபவ மார்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லுமென. 7

இத்தரையிற் பிறந்திறப்ப தெடுத்தவுடற் கடுத்தபொறி
நித்தியமாகிய வான்மா நின்சொரூப மென்றவரோ. 8

அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றெனைக்காணே
னிங்கியான் வேறுண்டே லெனக்கறியப் புகலுமென. 9

மெய்யுயிரிந் தியங்களல்லால் வேறறியே னென்றவனைப்
பையவவை யாலறியப் படானாநீ யென்றவரோ. 10

தேகம்வே றாகிலதைச் சேர்ந்ததிவ ணேதெனவே
சோகமே வினைகருமத் தொடர்ச்சியினா லென்றவரோ. ()

தேகமெடா முன்கருமச் செயல்வருமா றேதெனவே
யேகமா மரமும்வித்து மெனுமுறைபோ லென்றவரோ.

காயமுந் தானும்பிறிதேற் கன்மமெவர் செய்ததெனத்
தீயவுடற் கலதுகன்மச் செயறனக்கே தென்றவரோ. 13

படர்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்கெனவே
யடர்பலமு முடற்கேயா மறிவார்க்கே தென்றவரோ. 14

வெய்யவினை யுடற்கென்றான் மெய்யிங்கே விழவான்மா
வையமற நரகசொர்க்க மனுபவிப்ப தேதெனவே. 15

அனுபவமே யிலையதுவீ ணாரோ பிதநிகழ்த்திற்
றனுகரணச் செயறனதாச் சார்வதுபோ லென்றவரோ.

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்க மேதெனவே
முற்றுணர்வொன்றில்லாதமோகமென்றுசொன்னவரோ

அறிவுதேகந் தனக்கோ வான்மாவிற் கோவெனவே
பிறிவுசெயி லசித்துடலம் பிரமமறி வென்றவரோ. 18

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெனவே
யேகபரஞ் சோதியின்முன் னிருக்கையினா லென்றவரோ.

இருக்கினு மசேதனத்துக் கிச்செயலுண் டோவெனவே
யுருக்குபடாக் காந்தமுன்னி லூசிநிக ரென்றவரோ. 20

சொன்னசெய லுடற்காணாற் சுகதுக்க மியார்க்கெனவே
யன்னசுக துக்கமுந்தா னவ்வுடற்கே யென்றவரோ. 21

சேதனமா மான்மாவைச் சேராத துக்கசுக
மோதுசட மாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென. 22

பூதமைந்தோடைந்துயிர்கள் புலன்கள்பத்துமனமுதனுன்
கீதிருமெய் யிதின்மனத்துக் கின்பதுன்ப மென்றவரோ.

இந்தவிரு வகைத்தனுவிற் கேதுவே தெனவினவ
முந்தியகா ரணமதனுன் மூன்றுதனு வென்றவரோ. 24

மனமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மனமும்
வினவிலசே தனமலவோ விரித்தெனக்கு விளம்புமென.()

அம்மனத்தி லான்மா வபேதம்போற் றோன்றுதலால்
விம்முதுக்க சுகத்தைமன மேவுமென்று சொன்னவரோ.

அந்தமனே துக்கசுக மதனிடத்து நில்லாமல்
வந்திலங்கு மான்மாவை மருவியதென் சொல்லுமென.27

வெய்யகன லின்கூடு மேல்வைத்த சட்டியினூ
டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. ()

சித்தாகு மான்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந்தா
னொத்தாங் கிரண்டுமொன்று யுற்றவகை சாற்றுமென. 29

வல்லிரும்பு கனலுடனே மருவியது போன்மனமு
மொல்லையிலான் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ.()

உற்றதெத னுலெனவே யுள்ளமவி வேகமுறப்
பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென்றவரோ. 31

அடுத்தகுணம் போமோபின் னுன்மாவை விட்டெனவே
யெடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறுதல்போலென்றவரோ.

சுத்த படிகம்போற் சொரூபமாய்த் தானிருக்க
மெத்தவுமா சாமலின மேவியதென் சொல்லுமென. 33

அனாதியாம் வாசனையா லடைந்ததா சாமலின
மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்தவரோ.

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்
சிந்தை தெளியவென்று திருத்தா ளிணைவணங்க. 35

தேகாதி தானெனவே சேரபி மானங்கள்பந்த
மாகாத மானம்விடி லரியமுத்தி யென்றவரோ. 36

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந்
தபியாம னானறியத் தயவாகக் கூறுமென. 37

மறந்திடுமஞ் ஞானத்தான் மானம்வந்த தஞ்ஞான
மிறந்துவிடின் மானமும்போ மென்னவுரை செய்தவரோ

அந்தமுறை யஞ்ஞான மணுகுவதும் போவதுவுஞ்
சந்தயமி லாதறியத் தயவாகக் கூறுமென. 39

அஞ்ஞானம் வந்தத னாதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞானத் தாலே விடுமென் றுரைத்தவரோ. 40

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞானம்
வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை யேதெனவே. 41

அந்த வறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற்
சந்ததமு மானந்த சாகரங்கா ணென்றவரோ. 42

வேதாந்தத் தாற்குருவான் மெய்ஞ்ஞானம் வந்தவுடன்
றீதான துக்கசுகந் தீராத தேதெனவே. 43

பற்றறுமோ துக்கசுகம் பரோட்சஞா னத்தாலே
யற்றமா மவ்விரண்டு மபரோட்சத் தென்றவரோ. 44

பரோட்சமப ரோட்சமெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்
றிரோதமாம் புத்திநன்றாத் தெளியும் படிக்கெனவே. 45

பகர்ந்தசத்த ஞானம் பரோட்ச மனுபவத்தா
லகம்பிரம மெனுஞான மபரோட்ச மென்றவரோ. 46

தான்பிரம மென்றறிந்துந் தனுவைத்தா னென்றபுத்தி
யேன்போக வில்லையதை யெனக்கறியப் புகலுமென. 47

கேள்வியினுன் மனனத்தாற் கிளர்ந்தயோ கங்களினு
லாழ்பிரமத் தனுபவம்வந் ததுதீரு மென்றவரோ. 48

ஆதியாஞ் சிற்சொருப மாகாத தானினிமேற்
சோதிமன னுதியினுற் சொரூபமா மோவெனவே. 49

எப்போதுஞ் சின்மயந்தா னெனன்மறந்து தேடுவது
செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ.

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொருபங்
கூடுவனே யானென் குறைதீரச் சொல்லுமென. 51

வந்தவுடல் வேருயும் வாசனையாற் றுனெனலாற்
சந்தயமென் றற்சொருபந் தானுதற் கென்றவரோ. 52

தனுவைத்தா னெனும்பிரமை சத்தஞா னத்திலரு
தனுபவமெய்ஞ் ஞானத்தா லறும்வகையே துரையுமென.

விளக்குவிளக் கெனுமதனுல் வெய்யவிருள் போய்விடுமோ
துளக்கமிலா விளக்கேற்றிற் றெலையுமிரு ளென்றவரோ.

நெடுங்கால மான்மாவை நீங்காத வஞ்ஞானம்
விடுங்கால மெந்நாளோ மெய்ஞ்ஞானத் தர்லெனவே. 55

அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலுஞ்
செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோ லென்றவரோ. 56

கருமயோ கந்தவமே காரணமா நீங்காம
லருமையா ஞானம்வந்தோ வஞ்ஞானம் போமெனவே.

குத்துவெட்டும் படைகளினூற் கூடுமோ விருடுரக்க
வுத்தமமாம் ரவியுதித்தா லோடுமிரு ளென்றவரோ. 58

அஞ்ஞான விருடுரக்க வறியாத நல்லகன்ம
மெய்ஞ்ஞாலந்தனைப்பரிக்கும் விதமெவ்வா றெனவினவ.

இந்திரசா லம்போல விவ்வுலகை நம்மிடத்திற்
றந்திரமாத் தோற்றுவித்தோஞ் சத்யமல வென்றவரோ.

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளங்குமோவெனவின
சுத்திதனி லேரஜதந் தோன்றுதல்போ லென்றவரோ.[வ

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோ பிதங்கூடு
மியலுள்ள சகமுமுன்வே றிருந்ததுமுண் டோவெனவே.

மனமயக்கம் பிடிக்கிலில்லா வத்துவுந்தோன்றிடுமதுவோ
கனவில்விண்ணிற் ருன்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ.()

கனவுபோற்பிரபஞ்சமென்றீர் கண்விழித்தாற்கனவுபொய்யாம்
வினவுசகந்தினமுமெய்யா விளங்குவதென்சொல்லுமென.

மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமளவும்
பொய்யாம்பின்கனவதுபோற் போதம்வரிலென்றவரோ.

முன்புகண்டகனவுபொய்யா முழிசாக்ரம்போலவென்றீர்
பின்புமுத்தித் தசையடைந்தும் பிரபஞ்சநிற்ப தேதெனவே. 66

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற்
பரந்தசகங் காரியத்திற் பயன்படா தென்றவரோ. 67

கன்மவினை யஞ்ஞானங் கடந்துமதன் காரியமாம்
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே. 68

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல்போற் சிலகால
நட்டகன்ம மாய்ந்துமங்க நடுத்திடுங்கா ணென்றவரோ.

149488

சென்மம்போய் முத்தியினைச் சேரச் சிலரிருக்கத்
தொன்மையான் மாபலவோ சொரூபம் பகரு[illegible]

பிரமமென்று மீசனென்றும் பெருகுபல சீவரென்று
முரைமயக்க மலதான்மா வொருவனே யென்றவரோ. ()

ஏகந்தா னன்மா வெனும்வகையே மெய்யானு
லாகந் தோறும்பலவா யமர்ந்ததென்னேசொல்லுமென.

பலகடத்திற் சலத்தூடு பானுவிம்பந் தோன்றுதல்போற் [ரோ.
ருலைவில் புத்திதொறு மான்மாத் தோன்றுதல் காணென்றவ

ஆதித்தன்போலான்மா வளவில்புத்திதொறுந்தோன்றிற்
சாதிக்கு முத்தியெவர் தமக்கதனைச் சாற்றுமென. 74

பந்தமுத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்கேயா
மந்தவிம்பந் தனக்கிலையென் றறிவுவரச் சொன்னவரோ.

R22:41

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதெனவே
யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்றவரோ.

சீவனது தானென்றுஞ் சேரும் பிரமமென்று
மாவதுவோ பேரின்ப மாங்கதெனக் கோதுமென. 77

ஏகம் பிரம மிரண்டிலைநீ வேறுமல
சோகமுறும் பேதமறிற் றேன்றுமின்ப மென்றவரோ. ()

சீவபேதம் போமோ சித்தொன்று மோவெனவே
யாவன்மன மறுஞ்சுழுத்தி யவத்தையிற்பாரென்றவரோ.

பேதமல விவ்வுலகம் பிரமமய மென்றறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாத தேதெனவே. 80

கானலைநீ ரென்றேடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்
வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ. 81

அறிவானு நல்லறிவு மறியப் படும்பொருளும்
பிறிவாய்மூன் ருயிருத்தல் பேதமல வோவெனவே. 82

சொப்பனத்திற் றனித்தொருவன் ரோற்றம்வே றில்லையங்கே
கற்பனையாம்பொருளறிவு காண்பவன்போலென்றவரோ.

கற்பனையாம் பேதங்கள் காணுமற் போம்வகையை
விற்பனமா நானறிய விளம்புமென வேவணங்க. 84

துரியமாம் யோகத்தாற் றாயமனம் லயமாஞ
லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவரோ. 85

சிறந்திருக்கு மான்மாவுஞ் செகமெல்லா நிறைந்திருந்து
மறைந்தெனக்குத்தோன்ருத வகையேது சொல்லுமென.

சத்துச்சித் தாநந்தந் தாமூன்றுமத னுடனே
யொத்துற்று நாம வுருவஞ் சகமாகி. 87

இருக்கையினிற் ரோற்ரு திவைமூன்றும் பிரமமென
மரிக்கில்வரும்பின்னிரண்டு மறிசகமென் றுரைத்தவரோ.

அறிந்துகொண் ஞானத்தாலே யான்மாவை யென்றுரைத்தீர்
சிறந்தொளிரு மான்மாவுந் திருசியமா மோவெனவே. 89

முந்தியஞா னத்தாலே மூதிருமஞ்ஞா னந்துறக்கிற்
சிந்தையிலான் மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ.

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படியென் றேவினவ
வனுபவத்தி லறிவிடயா னந்தம்போ லென்றவரோ. 91

மனலயம்வந் தவரலது மற்றிலரோ முத்தரென
சனகனைப்போற் சீவன்முத்தர் தாமுமுள ரென்றவரோ.

சீவன்முத்தி யடைந்தோர்கள் செயலுமவர் தங்குணமு
நாவுரைக்கும் வாசகமு நானறியச் சொல்லுமென. 93

வருங்கருவு பிறப்பினெடு வளர்தல்பருத் தல்குறைத [ரோ.
லொருங்கலுமெய்க் கென்றதனை யொறுத்திருப்பா ரென்றவ

பார்ப்பதுவுங் கேட்பதுவும் பகர்வதுவுஞ் செல்வதுவு
மேற்பதுவுங் கரணதன்ம மெனத்துணிவா ரென்றவரோ.

பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங்காமம்
வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ.

வீடுந்தா ரமுமுறவு மேவியென்று மிருந்தாலு
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ. 97

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னுளொன் றுயினும்பி
னுற்றபுளி யம்பழமு மோடுமொப்பா ரென்றவரோ. 98

கூறுமுலகி யற்கையுடன் கூடினுமெய்ஞ் ஞானம்வந்தோர்
சேறும்பிள்ளைப்பூச்சியும்போற்றிரிவார்காணென்றவரோ

ததியூடுகடைந்த வெண்ணெய் தான்மோரிற் கிடப்பதுபோன்
மதியோடு கூடினும்பின் மயங்கார்கா ணென்றவரோ. ()

அருச்சுனன்றன் பொருட்டாக வனைவருக்குஞானம்வரப்
பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர். ()

ஆயர் குலமாத ரளவிலோரைப் புணர்ந்துந்
தூய பதினறு யிரவருடன் றேய்ந்திருந்தும். 102

பரம முனிவர்முன்னே பரிச்சித்தைத் தீண்டியன்று
பிரமசரியஞ் செலுத்தும் பேரொளியே கண்வளரீர். 103

வெண்பா

ஆதிமூ லம்விசயற் காதிமறை யின்பொருளை
யோதியு ணர்த்துமிந்த வுண்மைதனைக்-காதலுற்றுக்
கற்றோருங் கேட்டோருங் காசினியில் வாழ்ந்துமுத்தி
பெற்றோர்கண் முத்தர்பெறும் பேறு. 104

கீதாசாரத்தாலாட்டு முற்றிற்று.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீதத்துவராயசுவாமிகள்

அருளிச்செய்த

# திருத்தாலாட்டு

## தத்துவப்பிரகாசம்

அன்னைத் தரமாகி யாவர்க்கு மெய்தரிய
தன்னைத் தரமேனி சாத்தும் பெருமானே. 1

துஞ்சும் பிறவித் துயரை நினைந்தடியே
னஞ்சும் படிகண் டழுவித்த வாண்டகையோ. 2

விரும்பித் தனைத்தேட வெவ்வினையே னெஞ்ச
விரும்பைக் கனிசெய்த வெந்தை பெருமானே. 3

முன்வேத மெல்லா மொழிவரிய மொய்கழல்கொண்
டென்வே தனைகண் டெழுந்தருளி வந்தானே. 4

நன்கொன் றும் வானவர்க ணின் றுணங்க நானிலத்தே
யென்கண் களிக்க வெழுந்தருளி வந்தானே. 5

தொந்தனை தீரச் சுருதி தொழும்பதத்தை
வந்தனை செய்ய மதிதந்த வள்ளலோ. 6

நஞ்சேய் பிறவிக்கு நாயே னடுங்காம
லஞ்சேலஞ் சேலென் றருளும் பெருமானே. 7

தேசார் முனிவர்குழா நின் றுணங்கத் தீயேனைக்
கூசாம லாளக் கொடியிட்ட கொண்டலோ. 8

மீட்டுகைக்கு முள்ள முருக்கிநில மேல்வீடு
காட்டுகைக்கு வீரக் கழலிட்ட கண்டகனே. 9

கண்குளிர நான்கண்டு கொள்ளக் கடிகமழுந்
தண்களப மெய்நிறையச் சாத்தும் பெருமானே. 10

அனைத்துத் திசைகளுக்கு மப்பாலாய் நின்ற
தனக்குப் பரிவட்டஞ் சாத்தச் சமைந்தானே. 11

இங்கழுநீர் மாலை யெனக்கருளி யின்னளிசேர்
செங்கழுநீர் மாலை புனைந்தருளுந் தேசிகனே. 12

புண்டரீ கத்தவனுங் காணாத பொன்முடிக்கே
தொண்டர் திருமாலை சூட்டக் கொடுத்தானே. 13

செற்ற பிறவி நீறுகத் திருமுண்ட
மற்ற பிறைபோ லணிந்தருளு மண்ணலோ. 14

ஆங்கோயி லீதென் றடியே னகம்புகுதப்
பூங்கோயி லுள்ளே புகுதும் பெருமானே. 15

ஆத்த மறைகூற வஞ்சு மடியிணைகண்
டேத்த வடியர்குழா மின்புற் றிருந்தானே. 16

வேதன மென்னுருவ மாக்குதற்கு வீரசிங்
காதன மேறி யமுழ்ந்த விருந்தானே. 17

தோயமுன் பாகத் தொழுதெழுமென் கைப்பொருளுங்
காயமுமா வியுங்கைக் கொள்ளுங் கற்பகமோ. 18

புண்டரிகக் கைம்மலரென் புன்றலைமேல் வைத்தருளிப்
பண்டை வினைதீரப் பார்க்கும் பெருமானே. 19

ஆவா விருவ ரறியாத சேவடியை
வாவாவென் றென்றலைமேல் வைக்கும் பெருமானே. 20

ஏட்டை வாசித்து விடாமே யெனக்கென்னைக்
காட்டவா வென்ற கருணைத் தடங்கடலோ. 21

என்ன தியானென் றினியொருகா லத்தினுள்ளு
முன்ன லறவூ னுயிர்வேறு செய்தானே. 22

பூண்ட புலன்கள் பொறிவழியே போகாமே
மீண்டிரு வென்று விளம்பும் பெருமானே. 23

புற்கடந் தோன்றாத வண்ணம் புரளாமே
மற்கட மாமனத்தை மாட்டும் பெருமானே. 24

பொய்யாகு மெய்யில் வேறாகும் புருடனையே
கையா மலகமெனக் காட்டும் பெருமானே. 25

உனைமறைய மூடு முணர்விலா மாயைக்
கனவிருளைக் காணென்று காட்டும் பெருமானே. 26

கண்ட விருளைநீ காணாதே யவ்விருளைக்
கண்ட வறிவைநீ காணென்று சொன்னானே. 27

கண்ட வறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த
பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்றானே. 28

கங்குலா மாயவிருள் காண்கிலேன் காண்கின்ற
தெங்கு மறிவென் றிசைக்கவிசைந் தானே. 29

சாதமா மிவ்வுடல நானல்லேன் சான்றாகும்
போதமே நானென்னப் போதிக்கும் போதகனே. 30

ஏரணவு மிஞ்ஞாலத் தோற்ற நிலையிறுதி
காரணநா னானபடி காட்டும் பெருமானே. 31

யானறிகை யாலே யறிவ னறிவதல்லே
னானறிவ னாகுமென நாட்டந் தருவானே. 32

சான்று மறிவுருவஞ் சாக்கியமா மிச்சகமுந்
தோன்றாத வண்ணஞ் சொருகுவித்த தோன்றலோ. 33

இருந்த விருப்பினையும் யானறிவ தின்றித்
திருந்த விருக்க வருள்செய்த தேசிகனே. 34

அந்த வுபாதி யுனக்கான வப்பரிசே
யிந்த வுபாதியிறைக் கென்னும் பெருமானே. 35

தான்சகத்தைக் கண்டுந் தனைக்கண்டுந் தான்மறந்து
மூன்செயவத் தைமூன் றுண்டிதற்கு மென்றானே. 36

அழுந்த விருந்த விருப்பாரா லதுவிட்
டெழுந்திருந்த தாரா லியம்பிக்கா ணென்றானே. 37

வல்லிருண் மூடி யறியேனை மற்கடத்தைப்
பல்லிளி கண்டு பதைப்பித்த பண்பனே. 38

பதையாத வண்ணம் பரஞ்சுடரைக் காட்டிச்
சிதையா விருளைச் சிதைவித்த சேவகனே. 39

மீட்சி செலவின்றி வேறின்றி விண்முதலாங்
காட்சியுங் கண்ணாகக் காணுங்கண் டந்தானே. 40

கண்டகண் ணாலே கடலுலகும் பாதலமு
மண்டமு நேராக வமிர்துசெய்த வண்ணலோ. 41

உதிப்பதெல் லாமு முணர்வன் றுணர்வை
மதிப்பதுவும் விட்டுநீ வாளாவி ரென்றானே. 42

நாற்றஞ் சுவையொளியூ றோசையெலா நாட்டமெனுந்
தோற்றமுங் காணாதே சும்மாதி ரென்றானே. 43

சித்தசித் தீசத் திரிவிதமுந் தீர்ந்தபா
ழித்தனைக்கு முற்பத் தியுமிதுவே யென்றானே. 44

மும்மைப்பாழ் தீர மொழியா மொழியாலே
நம்மைப்பா ரென்று நவிலும் பெருமானே. 45

அபாவபா வங்களுக் கப்பாலாய் நின்ற
சுபாவமாந் தன்சோதி சொல்லாமற் சொன்னானே. 46

இவ்வா றறிந்தபரி சென்னவொண்ணா வின்பத்தைச்
செவ்வாய் மலராமற் செப்பும் பெருமானே. 47

ஆனந்த வெள்ளமென தங்கைக் கனியாக
மோனந்தன் னாலே மொழியும் பெருமானே. 48

ஆட்டின மாயக்கூத் தென்ன வகத்துள்ளே
கூட்டெனை ஞானக்கூத் தாட்டிய வித்தகனே. 49

செல்ல லறுத்த சிவப்பிர காசனே
தொல்லை மறைதேர் சொருபானந் தச்சுடரோ. 50

சேய்வந்த வானவருங் காணாத சேவடியான்
வாய்வந்த வாபுகழ வாழும் பெருமானே. 51

திருத்தாலாட்டு முற்றிற்று.

---

0222:417 N3L
149488

## பட்டினத்தடிகள் அருளிச்செய்த

# திருப்பாடற்றிரட்டும்

## பத்திரகிரியார் அருளிச்செய்த

# திருப்புலம்பலும

## மூலமும் விருத்தியுரையும்

எல்லா நிலைகளிலும் உயர்ந்தநிலை துறவறநிலையென்று நம் முன்னோர்கள் அறிவுறுத்தியிருப்பது எவரும் அறிந்ததொன்றே. அத்தகை நிலைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் பட்டினத்தடிகள் என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பட்டினத்தடிகள் துறவுநிலையைத் தாயுமானருள்ளிட்ட பல சான்றோர் போற்றியிருக்கின்றனர்.

துறந்தவருள் தலைசிறந்து விளங்கும் பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களின் மாண்பை அறியாதாரில்லை. அப்பாடல்களை ஓதுவோர் உலகப்பற்றில் வெறுப்பும், கடவுள் பற்றில் விருப்புங்கொள்வர் என்பது உறுதி. அத்துணைச் சிறப்பு வாய்ந்த அவர் திருப்பாடல்களை ஓதி உய்யவேண்டுவது ஒவ்வோர் அறிஞர் கடனாம்.

பட்டினத்தார் திருப்பாடல்களைப் பொருளுணராது ஓதுவதனால் பெரும்பயன் விளைதல் அரிது. அக்காரணம்பற்றிக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படவேண்டிப் பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டுக்கும், பத்திரகிரியார் திரும்புலம்பலுக்கும் ஸ்ரீமான் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைக் கொண்டு எளியநடையில் பல மேற்கோள்களடங்கச் சிறந்த விருத்தியுரை எழுதுவித்து, அவையடங்கிய நூலை நாம் வெளியிட்டுள்ளோம்.

அந்நூல் உயர்ந்த காகிதத்தில் பிழையறச் சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் தமிழ்நாட்டுக்கு நன்கு தெரிந்தவராதலால் அவரெழுதிய உரையைப்பற்றி நாமொன் ம் இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. புத்தகத்தை ங்கி வாசித்தால் அதன் நிலையும் தன்மையும் செவ்வனே கும். விலை ரூபா-2

அ. இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்
நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

8A / 6-49